கள்ளக்குறிச்சி மாவட்டம், மூங்கில்துறைப்பட்டில் உள்ள கள்ளக்குறிச்சி கூட்டுறவு சர்க்கரை ஆலை 1ன் செயல்பாடுகளை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேற்று (08.05.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் சர்க்கரைத் துறை இயக்குநர் க.அன்பழகன், மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன், சங்கராபுரம் சட்ட மன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் கள்ளக்குறிச்சி பாராளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் அவர்கள் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் பலர் உள்ளனர்.

டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமை கடலூர் மேற்கு மாவட்டக் கூட்டம்!

நாடு போற்றும் நான்காண்டு - தொடரட்டும் பல்லாண்டு! சாதனை விளக்க தொடர் பொதுக்கூட்டங்கள்!

அமைச்சர் சி.வெ.கணேசன் சிறப்புரை! சபா.இராசேந்திரன்,எம்.எல்.ஏ. முன்னிலை!

கடலூர், மே 9 - ஆ.குணசேகரன், இரா.சந்

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், நெய்வேலியில் நடைபெற்றது. "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

கடலூர் மேற்கு மாவட்ட கழக செயற்குழு கூட்டம், நெய்வேலி தொ.மு.ச. அலுவலகத்தில், நேற்று முன்தினம் 07.05.2025, புதன் கிழமை, மாலை 5 மணியளவில், நெய்வேலி தொமுச அலுவலகம், கலைஞர் அரங்கத்தில், மாவட்ட கழக அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்த கோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் முன்னிலை வகித்தார். தொழிலாளர் நலன் - திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட பொருளாளர் ஜி.தண்டபாணி, தலைமை செயற்குழு உறுப்பினர்கள் வி.கே.வெங்கட்ராமன், பாவாடை கோவிந்தசாமி, பொதுக்குழு உறுப்பினர்கள் என்.பலராமன், கே.அறிவழகன், பொ.புகழேந்தி அரங்க ஆர்.பாலகிருஷ்ணன், ஆர்.ராதாகிருஷ்ணன், க.ராஜேந்திரன், செந்தமிழ்செல்வி கருப்புசாமி,

ஒன்றிய கழக செயலாளர்கள் பட்டூர் வி.அமிர்தலிங்கம், பா.செங்குட்டவன், த.சின்னசாமி, சிவ.தியாகராஜன், கனக.கோவிந்த சாமி, தி.வேல்முருகன், ஆசைத்தம்பி, தோஷ்குமார், நகர செயலாளர்கள் கே.ராஜேந்திரன், ப.மணிவண்ணன், க.தண்டபாணி, வி.குருநாதன், பரமகுரு, பேரூர் கழக செயலாளர்கள் ஆர்.சுந்தரவடிவேல் வ.ஜெயமூர்த்தி,சி.செல்வம்,

மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் இளைஞர் அணி எம்.எஸ்.கணேஷ் குமார், மாவட்ட ஆதி திராவிடர்நல அணி க.ராமு, மாணவரணி சதீஷ்குமார், துணை அமைப்பாளர் செல்வமணி, என்.எல்.சி, தொ.மு.ச தலைவர் பா.திருமாவளவன், பொதுச் செயலாளர் என் ,பாரி, பொருளாளர் ஆர் .ஐயப்பன் அலுவலக செயலாளர் ஆர் .ஜெரால்டு ,வழக்கறிஞர் அணி அருள்குமார், பாரி இப்ராஹிம், கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை வழக்கறிஞர் மதனகுரு, தகவல் தொழில்நுட்ப அணி ஜி.ஆனந்த்,மகளிர் அணி ஜெயந்தி நடராஜன், அயலக அணி சேதுராமன், சிறுபான்மையினர் அணி அன்சரலி, முகமது யூசுப், சுற்றுச் சூழல் அணி செந்தில்குமார், தொழிலாளர் அணி தங்க.அன்பழகன், நெசவாளரணி சாமிநாதன், மகளிர் தொண்டர் அணி இந்துமதி, மருத்துவரணி டாக்டர் ஆர்.ராஜேஷ், மீனவர் அணி பூ.அரங்கநாதன், வர்த்தக அணி டி.குணா, விவசாய அணி க.சேகர், விவசாய தொழிலாளர் அணி கோனூர் பூ.மதியழகன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் தங்க.நாராயணசாமி, துரை ராஜ், சதாம் உள்ளிட்ட மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ,

மாவட்ட சார்பு அணி கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறை வேற்றப்பட்டது.

இந்திய ஒன்றியத்திற்கே முன்மாதிரியான முதல்வராக திகழும் நமது கழகத் தலைவர் அவர்களுக்கு நாட்டின் அனைத்து திசைகளிலிருந்தும் பாராட்டுகளும், வாழ்த்துகளும் குவிகிறது. அவரின் தொலை நோக்குத் திட்டங்கள் அயல் நாடுகளிலும், ஐ.நா. மன்றத்திலும் வரவேற்பு பெற்றுள்ளது. நாடு போற்றும் நான்காண்டு சாதனைகளுக்காக இதுவரை எந்த முதலமைச்சரும், பெற்றிராத வண்ணம் திசையெட்டும் போற்றிப் புகழ்ந்து ஒன்றிய அரசும், பல்வேறு நிறுவனங்களும், பத்திரிக்கைகளும் பாராட்டி விருதுகளை ஏராளமாக வழங்கியுள்ளன.

நமக்கு கொள்கை ரீதியாக எதிரானவர்கள் கூட ஆளுகின்ற மாநிலங்களில் நமது திராவிட மாடல் அரசு திட்டங்களை பின்பற்றுகின்ற வகையில் முன்மாதிரி அரசாக நமது கழகத் தலைவர் தளபதி அவர்கள் நடத்தி வருகிறார். அதனால் மக்கள் பாராட்டுகின்றனர், மகளிர், மாணவர்கள், தொழிலாளர்கள், தொழில்முனைவோர், பத்திரிக்கைகள், ஊடகங்கள், பிற மாநில அரசுகள், நீதி மன்றங்கள் ஆகியவை பாராட்டுகின்றன. இவற்றுக்கெல்லாம் மேலாக ஒன்றிய அரசு தமிழ்நாட்டு அரசை பாராட்டி பல விருதுகளை வழங்கியுள்ளது. இந்த பாராட்டுதல்களோடு கடலூர் மேற்கு மாவட்ட கழகமும் தனது பாராட்டை கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களுக்கு தெரிவித்துக் கொள்கிறது.

கடந்த 03.05.2025ல் நடைபெற்ற மாவட்ட செயலாளர்கள் கூட்டத்தின் முடிவின்படியும், தலைமை கழகத்தின் அறிவிப்பின்படியும் " நாடு போற்றும் நான்காண்டு.. இது தொடரட்டும் பல்லாண்டு " என்ற தலைப்பில் கழக அரசின் நிகரில்லா சாதனைகளை விளக்கி, நமது கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழகங்களின் சார்பில் அந்நந்த பகுதிகளில் மாபெரும் பொதுக்கூட்டங்களை ஏற்பாடு செய்து அதில் நமது திராவிட மாடல் நாயகன் தளபதி அவர்களின் முத்தான திட்டங்களை பொதுமக்களிடம் சென்று சேருகின்ற வகையிலும், நவீன தமிழகத்தை அதன் கட்டமைப்பை மேம்படுத்திட அல்லும் பகலும் அயராது பாடுபட்டுக் கொண்டிருக்கின்ற நமது திராவிட மாடல் அரசின் சாதனைகளை விளக்கும் பொதுக் கூட்டங்களை நடத்திட ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் ஏற்பாடுகள் செய்ய வேண்டுமென இச் செயற்குழு கேட்டுக்கொள்கிறது.

வருகின்ற ஜூன் 01 ம் தேதியன்று மதுரையில் நடைபெற உள்ள பொதுக் குழுவிற்கு நமது கடலூர் மேற்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து மாவட்ட கழக நிர்வாகிகள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், சார்பு அணி நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்துக் கொண்டு சிறப்பிக்க வேண்டுமென இச்செயற்குழு தீர்மானிக்கிறது.

நவீன தமிழகத்தின் சிற்பி, சமத்துவ நாயகர், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 101வது பிறந்த நாளை சிறப்பாக கொண்டாடுகின்ற வகையில் நமது கடலூர் மேற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட அனைத்து ஒன்றிய, நகர, பேரூர், ஊராட்சி மற்றும் வார்டு, கிளைக் கழகங்களின் சார்பில் கழக கொடியேற்றி, நலத்திட்ட உதவிகள் வழங்கிட வேண்டு மென்று அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகி களையும், உள்ளாட்சி பிரதிநிதி களையும், சார்பு அணிகளின் நிர்வாகிகளையும் கேட்டுக்கொள்கிறது.

2026ல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலில் நமது கழகத்தின் வேட்பாளர்களும், கூட்டணி கட்சி வேட்பாளர்களும், போட்டியிடுகின்ற நமது கடலூர் மேற்கு மாவட்டத்திற்குட்பட்ட திட்டக்குடி, விருத்தாசலம், நெய்வேலி, பண்ருட்டி ஆகிய அனைத்து தொகுதிகளிலும் வெற்றிப் பெரும் வகையில் அனைவரும் ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் தேர்தல் பணியாற்றி வெற்றிக்கனியை நமது கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களிடமும், மாநில இளைஞரணி செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலி ன் அவர்களிடமும் ஒப்படைப்போமென அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகளையும், உள்ளாட்சி பிரதிநிதி களையும், சார்பு அணிகளின் நிர்வாகி களையும் கேட்டுக்கொள்கிறது.

விழுப்புரம் மத்திய மாவட்ட தி.மு.க. சார்பில், விழுப்புரம், கலைஞர் அறிவாலயத்தில் பேரறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர் ஆகியோரின் திருவுருவச் சிலைக்கு விழுப்புரம் மத்திய மாவட்ட கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா.இலட்சுமணன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தி இனிப்பு வழங்கினார். உடன் கழக நிர்வாகிகள் உள்ளனர்.

விழுப்புரம் மாவட்டம் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் செஞ்சி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு செஞ்சி சட்டமன்ற தொகுதியைச் சேர்ந்த 15 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ15.27 லட்சம் மதிப்பீட்டில்இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கினார். உடன் செஞ்சி ஒன்றிய பெருந்தலைவர் விஜயகுமார், செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலிமஸ்தான், ஒன்றிய துணை சேர்மன் ஜெயபாலன், மாவட்ட கவுன்சிலர் அரங்க ஏழுமலை, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் ராஜசேகர் ,வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர் உள்ளனர்.

கடலூர் மேற்கு மாவட்டக் கழகச் செயற்குழு கூட்டம், அவைத் தலைவர் டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராசேந்திரன் முன்னிலை வகித்தார். தொழிலாளர் நலன் – திறன் மேம்பாட்டு துறை அமைச்சரும், மாவட்ட கழக செயலாளருமான சி.வெ.கணேசன் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், சார்பு அணி நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில்

தி.மு.க. அரசின் சாதனை விளக்கப் பொதுக்கூட்டங்கள்!

மாவட்டக் கழகச் செயலாளர் - கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர். காந்தி அறிவிப்பு!

இராணிப்பேட்டை, மே 9- கழகத் தலைவர் முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற மாவட்ட கழக செயலாளர் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற தலைப்பில் கூட்டங்கள் நடத்திட வேண்டும் என்ற அறிவிப்புக்கு இணங்க இராணிப்பேட்டை மாவட்ட தி.மு.க. சார்பில் கீழ்க்கண்ட இடங்களில் பொதுக்கூட்டங்கள் நடைபெறும்.

08.05.2025 (வியாழக் கிழமை) அன்று

1) ஆற்காடு சட்ட மன்ற தொகுதி, திமிரி மேற்கு ஒன்றியம், காவனூர் கிராமம், பேச்சாளர் மு.அஜிம்

2) இராணிப்பேட்டை சட்ட மன்ற தொகுதி, இராணிப்பேட்டை நகரம், முத்துக்கடை, இராணிப்பேட்டை, பேச்சாளர் செங்குன்றம் திராவிடமணி

3) சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, காவேரிப் பாக்கம் தெற்கு ஒன்றியம், ஒச்சேரி கிராமம், பேச்சாளர் கவிஞர் நன்மாறன்

09.05.2025 (வெள்ளிக் கிழமை) அன்று

1) அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி, நெமிலி மத்திய ஒன்றியம், தக்கோலம் கூட்ரோடு, பேச்சாளர் கவிஞர் நன்மாறன்

2) அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி, அரக்கோணம் நகரம், சுவால்பேட்டை, அரக்கோணம், பேச்சாளர் கவிஞர் தமிழ்தாசன்

3) இராணிப்பேட்டை சட்ட மன்ற தொகுதி,

வாலாஜா நகரம், பேருந்து நிலையம், வாலாஜா, பேச்சாளர் திருவொற்றியூர் வாசு கருணாநிதி

4) சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, சோளிங்கர் மத்திய ஒன்றியம், பானாவரம் கூட்ரோடு, பாண்டிய நல்லூர் ஊராட்சி, பேச்சாளர் நாத்திகம் நாகராஜன்

5) சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, நெமிலி மேற்கு ஒன்றியம், ரெட்டிவலம் கிராமம், பேச்சாளர் மு.அஜிம்

10.05.2025 (சனிக்கிழமை) அன்று

1) அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி, அரக்கோணம் கிழக்கு ஒன்றியம், புளியமங்கலம் கிராமம், பேச்சாளர் தடா ஓ.சுந்தரம்

2) ஆற்காடு சட்ட மன்ற தொகுதி, ஆற்காடு கிழக்கு ஒன்றியம், தாஜ்புரா கூட்ரோடு, பேச்சாளர் ஏ.எஸ். பழனி, வெ.ஆர்த்தி

3) ஆற்காடு சட்ட மன்ற தொகுதி, ஆற்காடு நகரம், அண்ணாசிலை, ஆற்காடு, பேச்சாளர் கவிஞர் தமிழ்தாசன்

4) இராணிப்பேட்டை சட்ட மன்ற தொகுதி, ஆற்காடு மேற்கு ஒன்றியம், நந்தியாலம் கிராமம், பேச்சாளர் மு.அஜிம்

5) இராணிப்பேட்டை சட்ட மன்ற தொகுதி, மேல் விஷாரம் நகரம், கத்திய வாடி கூட்ரோடு, பேச்சாளர் செங்குன்றம் திராவிட மணி

6) சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, சோளிங்கர் மேற்கு ஒன்றியம், ஒழுகூர் கிராமம், பேச்சாளர் கவிஞர் நன்மாறன்

11.05.2025 (ஞாயிற்றுக்கிழமை) அன்று

1) அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி, அரக்கோணம் மேற்கு ஒன்றியம், சாலை கிராமம், பேச்சாளர் விஜயா தாயன்பன், த.கங்கா

2) ஆற்காடு சட்ட மன்ற தொகுதி, கணியம்பாடி ஒன்றியம், கணியம்பாடி கிராமம், பேச்சாளர் கவிஞர் தமிழ்தாசன்

3) இராணிப்பேட்டை சட்ட மன்ற தொகுதி, வாலாஜா கிழக்கு ஒன்றியம், கடப்பேரி கிராமம், பேச்சாளர் திருவொற்றியூர் வாசு கருணாநிதி, இரா.தமிழ்வாணன்

4) சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, சோளிங்கர் நகரம், பெருமாள் கோவில், சோளிங்கர், பேச்சாளர் நாத்திகம் நாகராஜன்

5) அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி, நெமிலி கிழக்கு ஒன்றியம், சேந்தமங்கலம் கிராமம், பேச்சாளர் தடா ஓ.சுந்தரம்

12.05.2025 (திங்கள் கிழமை) அன்று

1) அரக்கோணம் சட்ட மன்ற தொகுதி, அரக்கோணம் மத்திய ஒன்றியம், தணிகைபோளூர் கிராமம், பேச்சாளர் ஏ.எஸ்.பழனி

2) ஆற்காடு சட்ட மன்ற தொகுதி, திமிரி கிழக்கு ஒன்றியம், வாழைப்பந்தல் கிராமம், பேச்சாளர் தடா ஓ. சுந்தரம்

3) இராணிப்பேட்டை சட்ட மன்ற தொகுதி, வாலாஜா தெற்கு (ம) மத்திய ஒன்றியம், சிப்காட், பேச்சாளர் கவிஞர் நன்மாறன்

4)சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, காவேரிப் பாக்கம் வடக்கு ஒன்றியம், பன்னியூர் கூட்ரோடு, பேச்சாளர் செங்குன்றம் திராவிடமணி

5) சோளிங்கர் சட்ட மன்ற தொகுதி, சோளிங்கர் கிழக்கு ஒன்றியம், போளிப்பாக்கம் கிராமம், பேச்சாளர் வே.நவீந்தர்

எனவே சாதனை விளக்க பொதுக்கூட்டங்களில் மாநில, மாவட்ட நிர்வாகிகள், தலைமைச் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள் பொறுப்பாளர்கள், நிர்வாகிகள், முன்னாள் , இந்நாள் உள்ளாட்சி பிரதிநிதிகள், வார்டு கிளைக் கழக நிர்வாகிகள், சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், பாகநிலைய முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கு மாறு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் ஆர். காந்தி அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் தலைமையிலான திராவிட மாடல் அரசு பொறுப்பேற்று நான்கு ஆண்டுகள் நிறைவு பெற்று, 5 ஆம் ஆண்டு துவங்குவதையொட்டி விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில், விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி "நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு" என்ற கழக ஆட்சியின் சாதனை விளக்க கையேடுகள் மற்றும் இனிப்புகளை பொதுமக்களுக்கு வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயசந்திரன், தொகுதி மேற்பார்வையாளர் சிவ ஜெயராஜ், மாநில மகளிர் அணி பிரச்சார குழு செயலாளர் தேன்மொழி, ஒன்றிய செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, ஜெ.ஜெயபால், நகர செயலாளர் நயினா முகமது, பேரூராட்சி தலைவர் அப்துல் சலாம், துணை தலைவர் ச.பாலாஜி, மற்றும் மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள், அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்ட தி.மு.க. இளைஞர் அணி சார்பில், வடக்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆஷிக் ஏற்பாட்டில், சங்கராபுரத்தில் கோடைகால நீர் மோர் பந்தல் கள்ளக்குறிச்சி நாடாளுமன்ற உறுப்பினர் தே.மலையரசன் முன்னிலையில், வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு திறந்து வைத்து பொதுமக்களுக்கு தர்பூசணி, வெள்ளரி, நுங்கு, இளநீர் உள்ளிட்டவைகளை வழங்கினார், இதில் கழக நிர்வாகிகள் பலர் உடன் கலந்து கொண்டனர்.